ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

e-Newsletter
Vol 02: May - August 2010

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

# இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் 2009 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை வெளியிடப்பட்டது.




இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் 2009 ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையிலான தகவல்களை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதி இ.ப.மு.ஆ.கு. வின் செயலகத்தில் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.

இவ்வருட அறிக்கையில் முக்கிய விடயமாக அமைவது பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகளுக்கான தீர்வுகளை பத்திரிகைகளே சுயமாக தீர்த்துவைத்துள்ள விடயமாகும். இத்தகைய முறைப்பாடுகளை பத்திரிகைகளின் வாசகர்கள் தாமாகவே குறித்த பத்திரிகைகளின் ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது ஆசிரியர்கள் அவற்றை கவனத்தில் எடுத்து திருத்தம் அல்லது விளக்கங்களை பிரசுரித்துள்ளனர். இது ‘பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம்’ என்றழைக்கப்படுகின்றது இவ்வாறாக 2009 ஆம் ஆண்டு பத்திரிகைகளால் சுயமாக வழங்கப்பட்ட பதிலளிப்பதற்கான சந்தர்ப்பங்களாக 363 பிரசுரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் சிங்களப் பத்திரிகைகளில் 270, ஆங்கில பத்திரிகைகளில் 81, தமிழ் பத்திரிகைகளில் 12 என்ற அடிப்படையிலும் பிரசுரமாகியுள்ளன.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர்சபைத் தலைவர் திரு. குமார் நடேசன் அவரது ஆசிச் செய்தியில் “இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வேண்டுதலை நிறைவேற்றுவதன் மூலம் பத்திரிகை வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் மத்தியில் இந்த ஆணைக்குழு நல்ல அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

“பத்திரிகைகள் வெளியிடுகின்ற விடயங்கள் தொடர்பாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற மத்தியஸ்த தீர்ப்புக்களை பத்திரிகைகள் பிரசுரம் செய்கின்ற நிலைமைகள் இப்போது உயர்வடைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக பத்திரிகைகளுக்கு நேரடியாகச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகளுக்கு பத்தரிகைகளின் ஆசிரியர்கள் தாமாகவே திருத்தங்களை அல்லது பதிலளிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது அல்லது விளக்கங்களைப் பிரசுரிக்கும் நிலைமைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் ஊடகவியலாளர்களும் இந்த ஒழுக்கக்கோவைக்கு ஒத்துழைத்து வருகின்றனர்.

“துரதிஷ்டவசமாக பத்திரிகைப் பேரவை இன்னும் நடைமுறையில் இருந்து வருகின்றது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் ஊடாக பத்திரிகையாளர்களையும் பத்திரிகைகளின் அசிரியர்களையும் தண்டிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ள இந்த பத்திரிகைப் பேரவையை நடைமுறையில் இருந்து நீக்குமாறு எட்டு ஊடக அமைப்புக்கள் கூட்டாக ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது”.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் முரண்பாட்டுத் தீர்வுக் குழுவின் தலைவர் சாம் விஜேசிங்க குறிப்பிடுகையில் பத்திரிகைகள் பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் சமூகப் பொறுப்புள்ள ஊடக மொன்றைக் கட்டியெழுப்புவது தொடர்பாக அதிக கரிசனை காட்டியிருப்பது தெளிவாகின்றது” என்று குறிப்பிட்டுள்ளார்.

# உலகில் ஏனைய நாடுகளில் நடைமுறையில் உள்ள ஊடக முறண்பாட்டுத் தீர்வு பேரவைகள் (பகுதி 1)

உலகின் ஏனைய நாடுகளில் நடைமுறையில் உள்ள ஊடக முறண்பாட்டுத் தீர்வு பேரவைகளின் செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்துவது முதல் அவதானத்தின் நோக்கமாகும். அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பின்லாந்து, ஜேர்மனி, அயர்லாந்து மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் இவ்வாறான ஊடக முறண்பாட்டுத் தீர்வுப் பேரவைகள் உள்ளன.

அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவின் பத்திரிகைப் பேரவை அந்நாட்டின் பத்திரிகை மற்றும் சஞ்சிகை கைத் தொழில்துறையினரால் ஏற்படுத்தப் பட்டதாகும். இந்த பேரவையில் 15 அங்கத்தவர்கள் இடம்பெறுகின்றனர். அவர்கள் அவுஸ்திரேலியாவின் பத்திரிகை வெளியீட்டாளர்கள், ஊடகவியலாளர் யூனியன், சுதந்திர ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரில் இருந்து இந்த 15 பேரும் தெரிவு செய்யப்படுகின்றனர். சுயாதீனமான தலைமைத்துவத்தின் கீழ் இந்த பேரவை இயங்குகின்றது.

பெல்ஜியம்

பெல்ஜியத்தில் அமைந்துள்ள பத்திரிகைப் பேரவையில் 18 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 6 பேர் பத்திரிகை பிரசுரத்தார்களாகவும் 6 பேர் ஊடகவியலாளர்களாகவும் மேலும் 6 பேர் சிவில் சமூகத்தைச் சேர்ந்த (நீதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் சிவில் சமூக அங்கத்தவர்கள்) வர்களாகவும் உள்ளனர். ஊடக அமைப்புக்களாலும் பத்திரிகை வெளியீட்டாளர்களாலும் (50/50) என்ற அடிப்படையில் நிதியீட்டம் செய்யப்படுவதன் மூலம் இந்தப் பேரவையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கமும் ஊடக அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

பின்லாந்து

பின்லாந்து பத்திரிகைப் பேரவையில் 11 உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர். அதன் தலைவர் ஊடகத்துறையில் அனுபவம் பெற்றவராவார். 7 உறுப்பினர்கள் ஊடகத்துறையில் அனுபவம் பெற்றவர்களாகவும் 3 போர் ஊடகத்துறை சாராதவர்களாகவும் உள்ளனர். பேரவைக்கு 2/3 பங்கு நிதி ஊடக நிறுவனங்களின் மூலமும் 1/3 பங்கு நிதி நீதி அமைச்சு ஊடாகவும் வழங்கப்படுகின்றது.

**2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது பிடிக்கப்பட்ட படம்.**





## முரண்பாட்டுத் தீர்வுக்குழு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக்குழு 11 அங்கத்தவர்களைக் கொண்டதாகும். இதன் தலைவராக முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகமும் இலங்கையின் முதல் குறைகேள்(ஒம்புட்ஸ்மன்) அதிகாரியுமான சாம் விஜேசிங்க இருந்து வருகின்றார். இதன் ஏனைய உறுப்பினர்களாக கலாநிதி தேவநேசன் நேசய்யா, திருமதி சித்தி திருச்செல்வம், லுசில் விஜேவர்தன, ஜாவிட் யூசுப், டியொன் சூமன், சிரி ரனசிங்க, விஜித பெர்னான்டோ, ரி. சபாரத்னம், தயா லங்காபுர மற்றும் பிரமோட் டி. சில்வா ஆகியோர் இருந்து வருகின்றனர்.

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழுவும் இலங்கை பத்திரிகைப் பேரவையும் ஓர் ஒப்பீட்டுப பார்வை

இரண்டாம் பகுதி

| குறிக்கோள் | இலங்கை பத்திரிகைப் பேரவை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலமான அதிகாரம் | இலங்கை பத்திரிகை முறைப் பாட்டு ஆணைக்குழு ஊடகக் (கைத்தொழில்) துறையின் ஆதரவில் செயற்படும் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவைப் பொறிமுறை |
|---|---|---|
| • அதிகாரம் | • நீதிமன்ற அதிகாரம் உண்டு<br><br>• மாவட்ட நீதிமன்றங்களுக்கிருக்கும் பின்வரும் அதிகார ங்களும் உள்ளன. (சாட்சிகளை,எழுத்தாளர்களை அழைத்தல்,குற்றவாளிகளுக்கு தண்டணை விதித்தல்,குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை விதித்தல்)<br><br>• விசாரணைகளை ஆரம்பித்தல் மற்றும் ஊடகங்களுக்கு தண்டனை விதிக்கும் அதிகாரம். | • நல்லிணக்கம் (Conciliation) சமாதானப்படுத்தல் (Mediation) தீர்ப்பளித்தல் அல்லது மத்தியஸ்தம் (Arbitration)<br><br>• பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் முறைப்பாட்டாளர் ஆகிய இரு தரப்பாரும் திருப்திப்படும்விதமான விசாரணை அல்லது தீர்ப்பு |
| • பொறுப்புக்கள் | • பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் பதிவு செய்தல்<br><br>• முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளலும் 2002 வரையில் அவற்றை விசாரணை செய்தலும் | • முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளலும் 2003 ஆம் ஆண்டு முதல் அவற்றை விசாரணை செய்தலும்<br><br>• பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையை அமுல்படுத்தும் பொறுப்பு<br><br>• கொழும்பிலும் அதற்கு வெளியிலும் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளி ப்பதன்மூலம் ஒழுக்கக்கோவைக்குட்பட்டதக அறிக்கையிடலுக்கு வழிகாட்டல். |
| • ஊடகங்களின் தொழில்ரீதியான தரம்(ஏற்புடமை) | • ஊடகவியலாளர்களால் அனேமாக அறியப்படாததும் சட்டத்தின் மூலம் அரசாங்க வர்த்தமாணி அறிவித்தலால் பிரகடணப்படுத்தப்பட்ட ஒழுக்கக்கோவை ஒன்று உண்டு | • 2008 ஆம் அண்டு திருத்தம் செய்யப்பட்ட இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவை<br><br>• இந்த ஒழுக்கக்கோவை எல்லா ஊடக அமைப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுவதாகும். |

## இங்கிலாந்தின் டெய்லி ஸ்டார் பத்திரிகைக்கு எதிரான முறைப்பாடு

இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் ‘டெய்லி ஸ்டார்’ பத்திரிகையில் வெளிவந்த “முஸ்லிம்களுக்கு மாத்திரம் தனியான மலசலகூடம்” என்ற தலைப்பில் பிரசுரமாகிய செய்திக்கு எதிராக இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த செய்தி வெளியீடானது பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதாகவும் இங்கிலாந்து பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் ஒழுக்கக்கோவையை மீறும் வகையில் அமைந்தி ருந்ததாலும் அம்முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அப்பத்திரிகையின் முன்பக்கத்தில் பிரசுரமாகியிருந்த குறித்த செய்தியில் ‘ரொச் டேல்’ என்ற வர்த்தக நிலையத்தில் “முஸ்லிம் களுக்கென தனியான மலசலகூடம் அமைக்கப்பட்டடிருப்பதால் அப்பகுதி நகர இலக்கா அனைவருக்கும் பொதுவான வரியை வீன்விரயம் செய்துவிட்டது” என்று பத்திரிகை குற்றம் சாட்டியிருந்தது. முறைப்பாட்டாளர், இந்த செய்தியில் குறிப்பிட்டபடி அவ்வாறு முஸ்லிம்களுக்கு மட்டும் என்று தனிப்பட்ட முறையில் மலசலகூடம் இல்லை என்றும் அனைவருக்கும் பொதுவான-தாகவே அம்மலசலகூடத் தொகுதி அமைக்கப் பட்டிருப்பதாகவும் முஸ்லிம்களுக்கு மட்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறான-தாகும் என்பதோடு அந்த மலசல கூடத்தொகுதி அமைக்கப்படுவதற்கு வரிசெலுத்துபவர்களது பணம் செலவிடப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார். எவ்வா றாயினும் இந்த செய்தியில் முஸ்லிம்களை மனதில் வைத்துக் கொண்டு பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தி தவறானதாக இருந்ததோடு மலசலகூட நிர்மாணத்திற்கு பணம் செலவிடுவது குறித்த தனியார் வர்த்தக நிறுவன உரிமையாளர்களாவர். அப்பகுதி நகர இலாக்கா அதற்காக பணம் செலவிடுவதில்லை.

இந்த முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகைத் துறையினருக்கான ஒழுக்கக்கோவையின் பிரிவு 1 இற்கமைய குறித்த செய்தி வெளியீட்டில் நிலவிய கவனயீனத்தையும், மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் வகையில் காணப்பட்ட இரண்டு தவறுகளையும் கருத்தில் கொண்டு அதற்கு திருத்தம் பிரசுரிக்க பணிப்புரை வழங்கியதோடு அப்பத்திரிகையின் இணையத்தளத்தில் அச்செய்தி முதற்பதிப்பில் நீக்கிக் கொள்ளப்பட்டதோடு இரண்டாவது பதிப்பில் திருத்தி பிரசுரிக்கப்பட்டது. (பிரித்தானிய ப.மு.ஆ.கு. அறிக்கை 27.10.2010)

# இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்திய சில நிகழ்வுகளின் பதிவுகள்



இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பாக விழிப்பை ஏற்படுத்தும் வகையில் கொழும்பு பொது நூலகத்தில் பார்வைக்கு வைப்பதற்காக பிரேம் பன்னப்பட்ட பதாதையை நூலகர் கே.எம்.சிரிசேனவிடம் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி கமல் லியனாரச்சி கையளிப்பதையும் அருகில் தமிழ்ப்பிரிவு முறைப்பாட்டு பொறுப்பதிகாரி எம்.எஸ். அமீர்ஹுசை நிற்பதையும் படத்தில் காணலாம். (2010.07.15)



கோட்டை மாதிவெல ராஹுல மத்திய கல்லூரியில் நடைபெற்ற "தொடர்பாடலும் ஊடக கற்கைநெறியும்" தொடர்பாக விழிப்பூட்டும் கருத்தரங்கில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரார்த்தனா வீரசிங்க விரிவுரை நிகழ்த்துகின்றார். (2010.05.04)



எல்பிடிய ஆனந்த மத்திய கல்லூரியில் எல்பிடிய வலயக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் பங்குபற்றிய கலந்துரையாடலின்போது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு அணைக்குழு பற்றி விளக்கமளிக்கப்படுகின்றது. (2010.06.17)



கொழும்பு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்களுடனான சந்திப்பின்போது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பாக விளக்கமளிக்கையில் பிடிக்கப்பட்ட படம். (2010.06.11)



இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் நடைபெற்ற சிறப்புக் கட்டுரை தொடர்பான கருத்தரங்கின்போது அது தொடர்பான ஆசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்களுடனான சந்திப்பின்போது.(2010.08.13)

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை வருமாறு :

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் த சில்வா, அல்ஹாஜ் என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், நிஸ்தார் காசிம், சுனில் ஜயசேகர

வடிவமைப்பு : ஹசினி அல்விஸ்

புகைப்படங்கள்: மனோஜ் ரட்நாயக